# சக்கர வியூகம்

தினசரி புலனாய்வு நாளிதழ்

SAKKRA VIYUGAM

www.sakkraviyugam.com | TNTAM/25/A1018 | sakkraviyugam2025@gmail.com

VOLUME : 01 | ISSUE: 195 | 08.1.2026 | THURSDAY | MARGAZHI : 25 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 195 | 08.1.2026 | வியாழக்கிழமை | மார்கழி : 25 | விலை : ரூ.5/-


## 4,000 கோயில் குடமுழுக்குகளை கண்ட

# “பக்தர்கள் போற்றும் ஆட்சி”

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்



சென்னை: ஜன.8-

நான்கரை ஆண்டுகளில் 4,000 கோயில் குடமுழுக்குகளை நடத்தி பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையைப் பெற்றுள்ள திராவிட மாடல் அரசு என்று முதல்வர் ஸ்டாலின் பெருமிதத்துடன் கூறி உள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

மத உணர்வுகளைத் தூண்டிக் குளிர்காய யார் எவ்வளவு முயன்றாலும், திரும்பவும் திராவிட மாடல் அரசுதான்.

தீரத்துக்கும் உறுதிக்கும் பெயர்பெற்ற திண்டுக்கல் மாவட்டத்தில் 1,595 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட விழாவில் பங்கேற்று, புதிய அறிவிப்புகளையும் வெளியிட்டேன். நான்கரை ஆண்டுகளில் 4,000 கோயில் குடமுழுக்குகளை நடத்தி பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையைப் பெற்றுள்ள நம் திராவிட மாடல் அரசை அவதூறுகளால் வீழ்த்தி விடலாம் என்று நினைத்தால்.. வெரி சாரி, உங்கள் எண்ணம் ஒருபோதும் ஈடேறாது.

தமிழ்நாட்டின் ரியாலிட்டியும் புரியாமல், வகிக்கும் பொறுப்பையும் உணராமல் பொய்க் குற்றச்சாட்டுகளை வாசிப்பவர்களுக்கு, 'பக்தர்கள் போற்றும் ஆட்சி இது' என மக்கள் தீர்ப்பில் தெரிய வரும்.

இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறி உள்ளார்.



■ தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாநில தலைவர்என். ஜெயச்சந்திரன் மாநில செயலாளர் முனைவர் சு கிருஷ்ணன், மாவட்ட தலைவர் மு.பரமேஸ்வரன் மாவட்ட பொருளாளர் கி.நாராயணன், மாவட்ட இணைச் செயலாளர் சி.அடைக்கன், ஜிழிஸிஞ்றிகி மாநில தலைவர் டிஎஸ்வி மூர்த்தி ஆகியோர் இன்று 7.1.26 மதுரை விமான நிலையத்தில் மாண்புமிகு பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி அவர்களை சந்தித்து, மாநில செயற்குழு முடிவின்படி,70 வயதடைந்த ஓய்வூதியர்களுக்கு 10 சதவீதம் கூடுதல் ஓய்வூதியம் வழங்க வேண்டும்,சத்துணவு அங்கன்வாடி ஓய்வூதியர் உள்ளிட்ட அனைவருக்கும் குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூபாய் 7850 வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மனு வழங்கப்பட்டது.

## திண்டுக்கல் வருகை தந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காந்திகிராமத்தில் உற்சாக வரவேற்பு

### கருப்பு சிவப்பு பலூன்களுடன் திமுக தொண்டர்கள் திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வரை வரவேற்றனர்



சின்னாளபட்டி, ஜன.8

திண்டுக்கல் மாவட்டத்திற்கு வருகை தந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ஆத்தூர் கிழக்கு ஒன்றியம் காந்திகிராமத்தில் ஒன்றிய செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் தலைமையில் திமுக நிர்வாகிகள் தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். கருப்பு சிவப்பு பலூன்களுடன் திமுக தொண்டர்கள் திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வரை வரவேற்றனர்.

திண்டுக்கல் வந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின அவர்களுக்கு மதுரையிலிருந்து திண்டுக்கல் வரை வழிநெடுக ஆயிரக்கணக்கான திமுகவினர் திரண்டு வந்து வரவேற்பு கொடுத்தனர்.

திண்டுக்கல் மாவட்ட எல்லையான பாண்டியராஜபுரம் பகுதியில் அமைச்சர்கள் ஐ பெரியசாமி, சக்கரபாணி மற்றும் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் தலைமையில் முதல்வர் ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து அங்கிருந்து திண்டுக்கல் வரும் வழியில் சின்னாளபட்டி அருகே காந்திகிராமத்தில் ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பாக ஒன்றிய செயலளார் பிள்ளையார்நத்தம் முருகேசன் தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, ஒன்றிய செயலாளர் முருகேசன், மற்றும் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், பிள்ளையார்நத்தம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் உலகநாதன், சின்னாளபட்டி பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத் தலைவர் ஆனந்தி பாரதிராஜா, காந்திகிராமம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் டி.ஜெயராமன், சின்னாளபட்டி பேரூர் கழக முன்னாள் பொருளாளர் எஸ்.ஆர். முருகன் ஆகியோரிடமிருந்து சால்வை பெற்றுக் கொண்டு தமிழக முதல்வர் வாழ்த்தினார். அதன் பின்னர் திண்டுக்கல்லில் நடைபெறும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு சென்றார். நிகழ்ச்சியில் ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக துணைச் செயலாளர்கள் ஆலமரத்துப்பட்டி ராஜேந்திரன், எம்.சி.பாண்டின், வசந்தா கென்னடி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜகணேஷ், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் அய்யங்கோட்டை குமரேசன், பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர் வினோத் ஒச்சப்பன், ஒன்றிய பிரதிநிதிகள் வடக்கு தெரு சந்திரன், தங்கப்பாண்டி, செட்டியபட்டி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் டி.ராஜா, கலிக்கம்பட்டி ஊராட்சி முன்னாள் தலைவர்கள் கோமதி செல்வக்குமார், புவனேஸ்வரி அருளரசன், ஆலமரத்துப்பட்டி ஆறுமுகம், இளைஞரணியைச் சேர்ந்த ரவி, தாமோதரன், மணிமாறன், மாணவரணியைச் சேர்ந்த கார்;த்திக் மற்றும் பேரூர் கழக பொறுப்பாளர்கள், பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள், மகளிரணியினர், கழக சார்பு அணி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



## குடிமங்கலம் மேற்கு ஒன்றியத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா

திருப்பூர், ஜன.8-

திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட குடிமங்கலம் மேற்கு ஒன்றியத்தில் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளரும் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினருமான கே ஈஸ்வர சாமி அவர்கள் தலைமை தாங்க மேற்கு ஒன்றிய கழக செயலாளர் அடி வள்ளி எம் எஸ் முரளி அவர்கள் வரவேற்புரை ஆற்ற கழகத் துணைப் பொதுச்செயலாளர் செய்தித்துறை அமைச்சர் மு பெ சாமிநாதன் கழக அமைப்பு செயலாளர் ஆர் எஸ் பாரதி கழக மகளிர் அணி துணை செயலாளர் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ், ஆகியோர் கழக கொடி ஏற்றி தமிழக அரசின் சாதனை விளக்க பட கண்காட்சிகளை திறந்து வைத்தார்கள். இந்நிகழ்வில் மறைந்த கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ச.கிரி அவர்கள் திருஉருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இதன் தொடர்ச்சியாக இரத்த தான முகாம் நடைபெற்றது, தூய்மை பணியாளர்கள் சவரத் தொழிலாளர்கள் பூத் பொறுப்பாளர்கள் பொதுமக்கள் ஆகியோருக்கு நலத்திட்டங்களை வழங்கினார்கள். கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில செயலாளர் பொள்ளாச்சி மா. உமாபதி ,மாநில வழக்கறிஞர் அணி இணை செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான் மற்றும் ஒன்றிய கழக செயலாளர்கள், முன்னாள் ஊராட்சி தலைவர்கள் ,சார்பு அணி நிர்வாகிகள், செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கிளைக் கழக நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்ச்சிக்கு நன்றியுரை ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பிரகாஷ்.

## கீழப்பாட்டக்குறிச்சி ப்ரம்மா திருக்கோவிலின் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் ஜனாதிபதி, பாரத பிரதமர் பங்கேற்க அழைப்பு



தென்காசி : ஜன.08.

தென்காசி மாவட்டத்தில் கீழப்பாட்டாக் குறிச்சியில் அமைந்துள்ள ப்ரம்மா திருக்கோவிலின் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் வருகின்ற ஏப்ரல் மாதம் 12ஆம் தேதி நடைபெறுவதாக கோவில் நிர்வாகி வழக்கறிஞர் ப்ரம்மஸ்ரீ சரசந்திர போஸ் மற்றும் கோவில் ஒருங்கிணைப்பாளர் இசக்கிபாண்டியன் செய்தியாளர்களிடம் தகவல் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து கோவில் நிர்வாகி மற்றும் கோவில் ஒருங்கிணைப்பாளர் செய்தியாளர்களிடம் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளதாவது.

தென்காசி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற ப்ரம்மா திருக்கோவில் கடந்த 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற்று 9 ஆண்டுகள் முடிவடையும் நிலையில் தற்போது 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒன்பதாம் தேதி துவங்கப்பட்டு 12ஆம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. ஒன்பதாம் தேதி காலை ஆலயத்தில் உள்ள 15 கும்பங்களுக்கும் தானியங்கள் நிரப்பும் நிகழ்ச்சி நடைபெறும், இத்திருக்கோவிலானது சத்தியம்வதா ,தர்மம் சரா, அதிதிதேவோபவ போன்ற நமது வேதகால சனாதன கொள்கை அடிப்படையில் இந்த கோயில் கட்டப்பட்டுள்ளது. பிரம்மலோகத்தில் கதவுகள் இல்லை, துவார பாலகர்கள் இல்லை, கதவுகள் திறப்பது அல்லது மூடுவதில்லை, உண்டியல்கள் இல்லை, ஆண்டு முழுவதும் 24 மணி நேரமும் திறந்திருக்கும் எந்த வகையான தீண்டாமை இல்லை, பணம் அல்லது மதிப்புமிக்க நன்கொடைகள் பிரம்மலோகத்தில் ஏற்றுக்கொள்ளப்படாது.

இத்திருக்கோவிலின் பிரம்மலோகத்தின் 9 ஆவது வருஷாபிஷேக முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு இந்திய திருநாட்டின் ஜனாதிபதி மற்றும் பாரத பிரதமரை விழா நடக்கும் நான்கு நாட்களில் ஏதேனும் ஒரு நாளில் பிரம்மா திருக்கோவில் நடைபெறும் பிரம்மோற்சவத்தில் கலந்து கொள்ள அழைக்கின்றோம். அதற்கான பணிகள் ஏற்கனவே டெல்லியில் தொடங்கப்பட்டுள்ளன. வருகின்ற ஏப்ரல் 9 ,10, 11 மற்றும் 12ம் தேதிகளில் காலை 11:00 மணி முதல் மாலை 3 மணி வரையிலும் தொடர்ந்து நான்கு நாட்கள் அன்னதானம் நடைபெறும் அனைத்து பக்தர்களும் 2026 ஏப்ரல் 9 முதல் 12 வரை நடைபெறும் பிரம்மலோக பிரம்மோற்சவத்தில் கலந்துகொண்டு எல்லாம் வல்ல பஞ் சமுக பிரம்மாவின் ஆசிகளை பெற அன்புடன் அழைக்கின்றோம் என தெரிவித்துள்ளனர்



■ மதுரை மாவட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய மூலம் தேர்வு செய்யப்பட்ட 09 இளநிலை உதவியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் தலைமையில் இ.ஆ.ப.,வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார்.ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் க.வானதி உடன் உள்ளார்.

# போலீசாருடன் தள்ளுமுள்ளு இதில் இந்துமுன்னணி தலைவர் காடேஷ்வரா சுப்பிரமணியம் காயம்

## இந்து முன்னணி நிர்வாகிகள் கைது

திருப்பூர், ஜன.8

திருப்பூர் மாவட்டம் அவிநாசியை அடுத்து ஈட்டிவிரம்பாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட ராக்கியாபட்டி பகுதியில் 2.8 ஏக்கர் பரப்பளவுள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமித்து குமரன் குன்று என்ற பெயரில் முருகர், விநாயகர், சிவலிங்கம், நந்தி உள்ளிட்ட சன்னதிகள் கொண்ட செல்வ முத்து குமாரசாமி திருக்கோயில் கட்டப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த கோயிலை அவிநாசி வட்டாட்சியர் சந்திரசேகர் தலைமையில் வருவாய்த்துறையினர் அவிநாசி காவல் துணை கண்காணிப்பாளர் சிவகுமார் தலைமையிலான நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்புடன் பொக்லைன் இயந்திரம் மூலம் இடித்து அகற்றப்பட்டது.

இந்நிலையில், இந்து முன்னணியினர் மற்றும் அப்பகுதியைச் சேர்ந்த பெண்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கோயிலை அகற்ற எதிர்ப்பு தெரிவித்து அழுது கூச்சலிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை போலீசார் வளாகத்தை விட்டு அப்புறப்படுத்தினர்.



அப்போது போலீசார் மற்றும் பொதுமக்களிடையே வாக்குவாதமும் தள்ளுமுள்ளும் ஏற்பட்டது.

இதனால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது. சம்பவ இடத்திற்கு இந்து முன்னணி தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் மற்றும் மாநில பொதுச் செயலாளர் கிஷோர் குமார் ஆகியோர் வந்தனர். அப்போது போலீசாருக்கும் இந்து முன்னணியினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதில் சில போலீசார் கால் இடரி சாலையின் ஓரமிருந்து பள்ளத்தில் சரிந்து விழுந்தனர். இதையடுத்து அங்கு பதற்றம் நிலவியது. தள்ளுமுள்ளுவில் காடேஸ்வர சுப்பிரமணியம் காயமடைந்தார்.

தொடர்ந்து, அவர்களிடம் போலீசார் மற்றும் வட்டாட்சியர் சந்திரசேகர் உள்ளிட்டோர் பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தையை அடுத்து காடேஸ்வரா சுப்பிரமணியம் அந்த இடத்திலிருந்து புறப்பட்டு தள்ளுமுள்ளுவில் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு சென்றார். மேலும் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்த இந்து முன்னணி மாநில பொதுச் செயலாளர்கள் கிஷோர் குமார், செந்தில் குமார் மற்றும் பெண்கள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோரை போலீசார் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களை பெருமாநல்லூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் அடைத்து வைத்தனர்.

ஆக்கிரமித்துக் கட்டப்பட்டிருந்த கோயிலில் இருந்து அகற்றப்பட்ட சுவாமி சிலைகளை இந்து சமய அறநிலைத்துறைக்கு லாரி மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. இந்த சம்பவத்தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இந்து முன்னணி தலைவர் காடஸ்வரா சுப்பிரமணியம் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு உள்ளதால் அங்கு பாஜகவினர், இந்து முன்னணி நிர்வாகிகள் திரண்டு வருகின்றனர.



# விருதுநகர் மகாராஜபுரத்தில் சதுரகிரி புனித பாதையாத்திரை முன்னிட்டு அன்னதான விழா

விருதுநகர், ஜன.8-

விருதுநகர் மாவட்டம், வத்ராயிருப்பு தாலுகாவிற்குட்பட்ட மகாராஜபுரம் கிராமத்தில், சதுரகிரி புனித பாதையாத்திரையை முன்னிட்டு மாபெரும் அன்னதான விழா சிறப்பாக நடைபெற்றது. அன்னதான நிகழ்ச்சியை வேல்யூ ரியாலிட்டி குரூப் நிறுவனத்தின் தலைவர் K.மகேந்திரன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் சதுரகிரி மலைக்குச் செல்லும் ஆயிரக்கணக்கான பக்தர்களும், சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களும் கலந்து கொண்டு அன்னதானத்தை பெற்றுக்கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். குறிப்பாக 5000க்கும் மேற்பட்ட பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் இந்த அன்னதான விழாவில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

K.மகேந்திரன் அவர்கள் கடந்த 15 ஆண்டுகளாக தொடர்ந்து இந்த அன்னதான நிகழ்ச்சியை எந்த இடையூறும் இன்றி நடத்தி வருவது அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளது. ஆன்மிக சேவையும் சமூக சேவையும் இணைந்திருக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன், இளைஞர்களின் முன்னேற்றத்திற்காகவும், சமூகத்தில் நல்ல ஆன்மிக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் இந்த நிகழ்ச்சியை அவர் முன்னின்று நடத்தி வருகிறார்.

அன்னதான நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பக்தர்கள் மற்றும் பொதுமக்கள், உணவு ஏற்பாடுகள், ஒழுங்கமைப்பு, வரவேற்பு உள்ளிட்ட அனைத்தும் சிறப்பாக இருந்ததாக தெரிவித்ததுடன், தொடர்ந்து 15 ஆண்டுகளாக இடைவிடாமல் சேவை செய்து வரும் திரு. K.மகேந்திரன் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

# வங்கதேசத்தில் கும்பலால் துரத்தப்பட்ட ஹிந்து இளைஞர்; கால்வாயிலில் குதித்து உயிரிழந்த சோகம்

டாக்கா, ஜன.8-

வங்கதேசத்தில் தன்னை துரத்தி வந்த கும்பலிடமிருந்து தப்பிக்க முயன்ற 25 வயது ஹிந்து இளைஞர் கால்வாயில் குதித்து உயிரிழந்தார்.

வங்கதேசத்தில் முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு பதவியேற்றதில் இருந்து அந்நாட்டில் ஹிந்துக்கள் மீது தொடர்ந்து தாக்குதல்கள் நடந்து வருகின்றன. வங்கதேச மாணவர்கள் அமைப்பின் தலைவர் ஷெரீப் ஓஸ்மான் ஹாதி கடந்த மாதம் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து, இத்தாக்குதல்கள் மிக கொடூரமாக மாறின. ஹிந்துக்கள் இளைஞர்கள் வன்முறை கும்பல்களால் அடித்தும், தீ வைத்து எரித்தும் கொல்லப்பட்டனர்.

வங்கதேசத்தில் கடந்தாண்டு டிசம்பர் 2 முதல் 35 நாட்களில், நாடு முழுதும், 11 ஹிந்துக்கள் கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கொலைக்கான காரணங்கள் வெவ்வேறாக கூறப்பட்டாலும் அனைவரும் ஹிந்துக்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது மீண்டும் நவோகான் மாவட்டத்தின் மகாதேப்பூர் பகுதியில் சோக சம்பவம் அரங்கேறி இருக்கிறது.

தன்னை துரத்தி வந்த கும்பலிடமிருந்து தப்பிக்க முயன்ற 25 வயது ஹிந்து இளைஞர் கால்வாயில் குதித்து உயிரிழந்தார். இவர் பந்தர்பூர் கிராமத்தை சேர்ந்த மிதுன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரது உடலை மீட்டு போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், ஆய்வு செய்து பார்வையிட்டார்

மதுரை, ஜன.8-

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார்,ஆய்வு செய்து பார்வையிட்டார்.



மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம், கல்லணை ஊராட்சியில் உள்ள உரப் பூங்காவினை பார்வையிட்டு அதனை மேம்படுத்த திட்ட அறிக்கை தயார் செய்து பணிகளை விரைந்து மேற்கொள்ளவும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், பிளாஸ்டிக் கழிவுகளைச் சேகரித்து தரம் பிரித்து மறுசுழற்சி செய்யும் பணியினை மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து கல்லணை ஊராட்சியில் உள்ள நேதாஜி கிஞ் நகரில் 15 ஆவது நிதிக்குழு மானியம் திட்டத்தின் கீழ் ரூபாய் 2 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள குளியல் தொட்டியை தூய்மையாக வைத்துக்கொள்ள உத்தரவிட்டார். மேலும் கல்லணை ஊராட்சியில் உள்ள நேதாஜி AD நகரில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நாடக மேடையை பார்வையிட்டார்.

பின்னர் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம், கீழக்கரை ஊராட்சியில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கத்தில் உள்ள உடற்பயிற்சி கூடத்தில் உபகரணங்களின் செயல்பாடுகள் குறித்தும், பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளையும் ஆய்வு செய்து பார்வையிட்டார்.

இந்த ஆய்வில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கதிரவன், வள்ளி, உதவிப் பொறியாளர்கள் சுரேஷ்குமார், ராதா, ஒன்றியப் பணி மேற்பார்வையாளர்கள் ஜானகி, சுமதி, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சங்கரி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சத்ரபதி சிவாஜி குறித்து சர்ச்சை; 22 ஆண்டுகளுக்குப் பிறகு மன்னிப்பு கோரிய ஆக்ஸ்போர்டு பல்கலை

புனே, ஜன.8-

சத்ரபதி சிவாஜி குறித்து புத்தகத்தில் ஆதாரமற்ற தகவல்களை வெளியிட்ட விவகாரத்தில், ஆக்ஸ்போர்டு பல்கலை பதிப்பகம் மன்னிப்பு கோரியுள்ளது.

அமெரிக்க வரலாற்று ஆசிரியர் எழுதிய,'சிவாஜி: இஸ்லாமிய இந்தியாவில் ஹிந்து மன்னன்' என்ற ஆங்கில மொழி புத்தகத்தை ஆக்ஸ்போர்டு பல்கலை பதிப்பகத்தால் கடந்த 2003ம் ஆண்டு பிப்ரவரி 13ம் தேதி வெளியிடப்பட்டது. இதில், மராட்டிய மன்னன் சத்ரபதி சிவாஜி குறித்த



ஆதாரமற்ற தகவல்கள் இடம்பெற்றிருப்பதாக எதிர்ப்புகள் கிளம்பின. அதனை ஆக்ஸ்போர்டு பல்கலை பதிப்பகமும் ஒப்புக் கொண்டது.

இந்த நிலையில், 22 ஆண்டுக்குப் பிறகு, சத்ரபதி சிவாஜியின் 13வது தலைமுறை வாரிசும், எம்பியுமான உதயன்ராஜே போஸ்லேவிடம் ஆக்ஸ்போர்டு பல்கலையின் பதிப்பகம் மன்னிப்பு கோரியுள்ளது.

மன்னிப்பு கடிதத்தில் ; புத்தகத்தின் 31, 33, 34 மற்றும் 93வது பக்கங்களில் ஸ்ரீ சத்ரபதி சிவாஜி மகாராஜ் பற்றிய சில தகவல்கள் ஆதாரமற்றவை என்பதை ஒப்புக்கொள்கிறோம். இதற்காக நாங்கள் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த சம்பவத்திற்காக, உதயன்ராஜே போஸ்லே மற்றும் பொதுமக்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறோம், எனக் குறிப்பிட்டுள்ளது.



# காங்கிரஸ் எம்.பி.,யிடம் கேள்வி கேட்கும் மக்களை மிரட்டுவதா? அண்ணாமலை கண்டனம்

சென்னை, ஜன.8-

கரூர் எம்பி ஜோதிமணியிடம் கேள்வி கேட்க வந்த நபர் மீது காங்கிரஸ் கட்சியினர் தாக்குதல் நடத்திய சம்பவத்திற்கு பாஜ மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் எம்பி ஜோதிமணியிடம், தொகுதி பிரச்னை குறித்து கேள்வி எழுப்ப வந்த நபரை, காங்கிரஸ் நிர்வாகிகள் தள்ளிவிட்டு தாக்கிய வீடியோவை தனது எக்ஸ் தளப்பக்கத்தில் அண்ணாமலை பகிர்ந்தார். மேலும், அவர் கூறியதாவது;

தனது தொகுதி எம்பியிடம் கேள்வி கேட்பதற்கு ஒவ்வொரு குடிமகனுக்கு உரிமை இருக்கிறது. ஜனநாயக முறையில் கேள்வி கேட்டால், ஏன் மிரட்டல் விடுக்கிறீர்கள்? இந்தக் கேள்வி கரூர் எம்பிக்கு மட்டும் பொருத்தமானது அல்ல. கடந்த ஆறு ஆண்டுகளாக தூக்கத்தில் இருக்கும் இண்டி கூட்டணி எம்பிக்களும் தான்.

கேள்வி கேட்கும் போது, அதற்கு முறையாக பதிலளிக்காமல், மிரட்டல், உருட்டல் விடுப்பது, தங்களின் தோல்விகளை வெளிப்படையாக ஒப்புக்கொள்வதற்கு சமம், எனக் குறிப்பிட்டுள்ளார்.

# மாறிமாறி ஊழல் குற்றச்சாட்டுகளை வைப்பது கொடுந்துயரம்; சீமான் சாடல்

ஈரோடு, ஜன.8-

திமுக அதிமுக மாறிமாறி ஊழல் குற்றச்சாட்டுகளை வைப்பது கொடுந்துயரம் என நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் சாடியுள்ளார்.

ஈரோட்டில் நிருபர்களிடம் சீமான் கூறியதாவது: ஊழல் குறித்து மாறி மாறி குற்றச்சாட்டுகள் வைக்கின்றனர். இது எவ்வளவு பெரிய கொடுந்துயரம் என்று பாருங்கள். திருவிழா காலத்தில் நடக்கும் நாடகம் போல இதுவும் நாடகம். இதனை பார்த்து சிரித்துவிட்டு போக வேண்டியது தான்.

அதிமுக பாமக கூட்டணி எதிர்பார்த்தது தான், இது ஒன்று தான் அவர்களுக்கு வாய்ப்பு. பிப்ரவரி 21ம் தேதி 234 தொகுதிகளுக்கு தேர்தல் வேட்பாளர்கள் அறி



விப்போம்.

ஒவ்வொரு பொங்கலுக்கும் பணம் கொடுக்க விரும்பினால் போன பொங்கலுக்கு கொடுத்து இருக்க வேண்டும். இது பொய் பொங்கல் அல்ல, தேர்தல் பொங்கலாக இருக்கிறது. 30 லட்சம் மடிக்கணினியை இப்போது கொடுக்க வேண்டிய தேவை என்ன இருக்கிறது. இது மக்களுக்கான அரசியல் அல்ல.

ஜாக்டோ ஜியோ அமைப்புக்கு வாக்குறுதி அளித்திருப்பது என்பது அமைப்பை பலப்படுத்துவது, அங்கு இருக்கும் ஓட்டுக்கள் அவர்களுக்கு முக்கியம். தூய்மை பணியாளர்கள் கருத்தில் கொள்ளப்படவில்லை.

கஞ்சா பயன்பாடு அதிகரித்துவிட்டது. போதை கலாசாரம் அரசுக்கு தெரியாமல் எப்படி வருகிறது. அதுபற்றி பேச திமுகவுக்கு அருகதை இருக்கிறதா? அவர்கள் சாராயத்தை அங்கீகரித்து விற்பனை செய்கிறார்கள். விற்பனை குறைய கூடாது என்று நினைக்கிறார்கள். மாவட்ட கலெக்டர் விற்பனை மேலாளர்களை அழைத்து கூட்டம் போடுகிறார்.

அரசு பள்ளியில் படிக்க வரும் மாணவர்கள் எண்ணிக்கை குறைகிறது. இது குறித்து கவலைப்படாமல், குடிக்க வருபவர்கள் எண்ணிக்கை பற்றி கவலைப்படுவதா? போதை கலாசாரம் பற்றி பேச திமுகவுக்கு என்ன தகுதி, அருகதை இருக்கிறது. இவ்வாறு சீமான் கூறினார்.

# அமைச்சர் அமித் ஷா குறித்து அவதூறு; ராகுலுக்கு நீதிமன்றம் சம்மன்

சுல்தான்பூர், ஜன.8-

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா குறித்து அவதூறாக பேசியதாக காங்கிரஸ் எம்பி ராகுலுக்கு சுல்தான்பூர் நீதிமன்றம் சம்மன் அனுப்பியுள்ளது.

கடந்த 2018ம் ஆண்டு கர்நாடகா சட்டசபை தேர்தலின் போது, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா குறித்து அவதூறு பேசியதாக காங்கிரஸ் எம்பி ராகுல் மீது, பாஜ தலைவர் விஜய் மிஸ்ரா வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு எம்பி,எம்எல்ஏக்களுக்கு எதிரான வழக்குகளை விசாரிக்கும் உத்தரபிரதேசத்தின் சுல்தான்பூர் சிறப்பு நீதிமன்றம் விசாரித்து வந்தது.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, காங்கிரஸ் எம்பி ராகுல் தரப்பு வக்கீல் காஷி பிரசாத் சுக்லா, வழக்கின் சாட்சியான ராம் சந்திரா துபேவிடம் குறுக்கு விசாரணை நடத்தினார். இதைத் தொடர்ந்து, விசாரணைக்காக காங்கிரஸ் எம்பி ராகுல் ஜனவரி 19ம் தேதி நேரில் ஆஜராகுமாறு நீதிமன்றம் சம்மன் அனுப்பியுள்ளது.

ஏற்கனவே அவதூறு வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்து வந்த ராகுல், கடந்த 2024ம் ஆண்டு பிப்ரவரி 20ம் தேதி கைது செய்யப்பட்டு, பின்னர் ஜாமினில் விடுவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# அதிமுக கூட்டணியில் பாமக: பழனிசாமி, அன்புமணி கூட்டாக அறிவிப்பு

சென்னை, ஜன8-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ள நிலையில், அதிமுக கூட்டணியில் பாமக இணைந்துள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்காக அதிமுக கூட்டணியை பலப்படுத்தும் முயற்சியில் இபிஎஸ் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். அந்த வகையில் பாமகவுடனான கூட்டணி குறித்தும் அதிமுக பரிசீலித்து வந்தது.

இந்நிலையில், இன்று காலை சென்னை பசுமைவழிச் சாலையில் உள்ள அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி இல்லத்துக்கு பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் சென்றார்.இந்த சந்திப்புக்குப் பின்னர் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியும், பாமக தலைவர் அன்புமணியும்



கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.அப்போது இபிஎஸ் கூறியதாவது: ஏற்கெனவே அதிமுக பாஜக கூட்டணி உறுதியாகிவிட்டது. இந்நிலையில் இந்தக் கூட்டணியில் பாமக இணைந்துள்ளது. இது இயற்கையான கூட்டணி. இந்தக் கூட்டணி அதிமுக பாமக கட்சியினர், தொண்டர்கள் விரும்பியவாறு அமைந்துள்ளது. இது வெற்றிக் கூட்டணி. வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் விரோத திமுக ஆட்சியை அகற்ற வேண்டும் என்ற லட்சியத்தின் அடிப்படையில் ஒரு வலிமையான தமிழகத்தை உருவாக்க, மக்களுக்கு தேவையான திட்டத்தை கொடுக்கும் அரசு அமைய எங்களது கூட்டணி 234 தொகுதிகளிலும் பெரும்பாலான இடங்களில் வெற்றி பெற்று, அதிமுக தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும்.அதிமுக, பாஜக, பாமக ஆகிய 3 கட்சிகளும் இணைந்து இரவு, பகல் பார்க்காமல் சுறுசுறுப்பாக செயல்பட்டு, மிகப்பெரிய வெற்றிபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறேன். தொகுதிகள் எண்ணிக்கை முடிவு செய்துவிட்டோம். மற்றவை பின்னர் அறிவிக்கப்படும். இவ்வாறு இபிஎஸ் கூறினார்.

இருப்பினும், பாமகவுக்கு 20 சட்டப்பேரவைத் தொகுதிகளையும், ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவியையும் ஒதுக்க அதிமுக முன்வந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

செய்தியாளர்களை சந்தித்த அன்புமணி ராமதாஸ்.தொடர்ந்து அன்புமணி பேசியபோது, “வரும் சட்டப்பேரவை தேர்தலை அதிமுக தலைமையிலான கூட்டணியில் இருந்து சந்திக்கும் வகையில் இணைந்திருக்கிறோம். இது, எங்களுக்கு மகிழ்ச்சியான தருணம். எங்கள் தொண்டர்கள் எதிர்பார்த்த கூட்டணியில் நாங்கள் சேர்ந்து இருக்கிறோம். இது வலுவான கூட்டணி.

எங்களது நோக்கம் மக்கள் விரோத, ஊழல் செய்கிற, பெண்களுக்கு எதிரான, சமூக நீதிக்கு எதிரான திமுக ஆட்சியை அகற்ற வேண்டும் என்பதே. மிகப்பெரிய வெற்றியை நாங்கள் பார்த்து இருக்கிறோம்.சமீபத்தில் 100 நாட்கள் நடைபயணம் மேற்கொண்டபோது கிராமப்புற மக்கள் திமுக மீது மிகுந்த கோபத்தில் இருப்பதை பார்த்தோம். தேர்தல் எப்போது வரும் என்று அவர்கள் காத்துக் கொண்டு இருக்கிறார்கள். உறுதியாக எங்களது கூட்டணி மிகப்பெரிய வெற்றி பெறும்.” என்றார் ,

## ஹரித்வாரில் 105 படித்துறைகளில் இந்து அல்லாதோருக்கு தடை: உத்தராகண்ட் அரசு பரிசீலனை



டேராடுன், ஜன.8-

கும்பமேளா நாட்களில் ஹரித்வாரில் கங்கை நதியின் 105 படித்துறைகளில் இந்துக்கள் அல்லாதோருக்கு தடை விதிப்பது குறித்து உத்தராகண்ட் அரசு பரிசீலித்து வருகிறது.

ஹரித்துவாரின் முக்கிய ஹர்கிபாரி படித்துறை பராமரிப்பை கண்காணித்து வரும் கங்கா சபை மற்றும் சில துறவிகளின் கோரிக்கையை தொடர்ந்து அதனை உத்தராகண்ட் அரசு பரிசீலித்து வருகிறது. இந்நிலையில் கும்பமேளா நாட்களில் 105 படித்துறைகளில் இந்து அல்லாதோருக்கு தடை விதிக்க வேண்டும் என்ற கங்கா சபையின் கோரிக்கைக்கு ஹரித்வாரில் வசிக்கும் பலர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தடை செய்வது சாத்தியமும் அல்ல, விரும்பத்தக்கதும் அல்ல என்று வழக்கறிஞர் சுதான்ஷு திவேதி கூறினார். நீர்மின்துறையின் முன்னாள் நிர்வாகப் பொறியாளர் ராகேஷ் சந்திரா கூறுகையில், ‘‘நமது மதத்தின் தாராளவாத பிம்பத்தை இந்தப் பாகுபாடு கடுமையாக பாதிக்கும்’’ என்றார். இது தவிர, ரிஷிகேஷ், ஹரித்வார் ஆகிய நகரங்களை ‘சனா தன புனித நகரங்கள்’ என்று அறிவிக்கவும் மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

## சத்தீஸ்கரில் நக்சல்கள் 26 பேர் சரண்



ராய்ப்பூர், ஜன.8-

சத்தீஸ்கர், சுக்மா மாவட்டத்தில், நக்சலைட்டுகள் 26 பேர் சரணடைந்தனர்.

சத்தீஸ்கர், தெலுங்கானா, மஹாராஷ்டிரா, மத்திய பிரதேச மாநிலங்களில் ஒரு காலத்தில் நக்சல் ஆதிக்கம் மிகுந்து காணப்பட்டது. இதை ஒடுக்கும் வகையில் மத்திய மாநில அரசுகள் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. நாடு முழுவதும் மார்ச் மாதத்திற்குள் நக்சல் இயக்கத்தை முற்றிலும் அழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என, பிரதமர் மோடி மற்றும் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அறிவித்துள்ளனர்.

இந்நிலையில், சத்தீஸ்கர் மாநிலம் சுக்மா மாவட்டத்தில் நக்சலைட்டுகள் 26 பேர் தங்கள் ஆயுதங்களை ஒப்படைத்து சரணடைந்தனர். இதில் பல்வேறு குற்றச்செயல்களில் தேடப்பட்ட 13 பேர் பற்றி தகவல் அளிப்போருக்கு 65 லட்சம் ரூபாய் பரிசு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு இருந்தது.

நக்சல் அமைப்புகளின் உயர்மட்ட தலைவர்கள் அடுத்தடுத்து கொல்லப்பட்டு வரும் சூழலில், சத்தீஸ்கர், தெலுங்கானா உள்ளிட்ட மாநிலங்களில் ஏராளமான நக்சல்கள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு சரணடைந்து வருகின்றனர். இதனால், நக்சல்களை அழிக்கும் நடவடிக்கை இறுதிகட்டத்தை எட்டி உள்ளது.

## மத சர்ச்சையாக மாறிய மாணவர் சேர்க்கை விவகாரம்; ஜம்முவில் மருத்துவக் கல்லூரியின் அங்கீகாரம் ரத்து




ஸ்ரீநகர், ஜன.8-

மாணவர் சேர்க்கையில் முஸ்லிம்களுக்கு மட்டும் அதிக முக்கியவத்துவம் கொடுத்ததாக ஜம்முவில் செயல்பட்டு வரும் ஸ்ரீமாதா வைஷ்ணோ தேவி மருத்துவ கல்லூரியின் அங்கீகாரத்தை தேசிய மருத்துவ ஆணையம் ரத்து செய்துள்ளது.

ஜம்மு காஷ்மீரின் ரியாசியில் அமைந்துள்ள ஸ்ரீ மாதா வைஷ்ணோ தேவி மருத்துவக் கல்லூரியை, ஸ்ரீ மாதா வைஷ்ணோ தேவி கோவில் நிர்வாகம் நடத்தி வருகிறது. முதல் முறையாக இந்த ஆண்டு முதல் இந்த கல்லூரியில் மாணவர் சேர்க்கை துவங்கி உள்ளது. இந்தக் கல்லூரிக்கு 50 எம்பிபிஎஸ் இடங்கள் ஒதுக்கப்பட்டன. அவற்றில், 42 இடங்கள், முஸ்லிம் மாணவர்களுக்கும், 7 இடங்கள் ஹிந்துக்களுக்கும், ஒரு இடம் சீக்கிய மாணவருக்கும் கிடைத்துள்ளது.

இந்த ஒதுக்கீடுகள் தான் ஜம்மு காஷ்மீரில் உள்ள ஹிந்து அமைப்புகளை கொந்தளிக்க வைத்திருக்கிறது. இது தொடர்பாக துணை நிலை கவர்னர் மனோஜ் சின்ஹாவை சந்தித்து இந்த விவகாரம் தொடர்பான கோரிக்கை கடிதமும் வழங்கப்பட்டது. மாணவர் சேர்க்கை விவகாரத்தில் ஸ்ரீ மாதா வைஷ்ணோ தேவி கோவில் நிர்வாகம் உரிய விதிகளை பின்பற்றவில்லை என்று குற்றம்சாட்டப்பட்டது.

இந்த நிலையில், மாணவர் சேர்க்கையில் உரிய விதிகளை பின்பற்றவில்லை எனக் கூறி, ஸ்ரீமாதா வைஷ்ணோ தேவி மருத்துவ கல்லூரியின் அங்கீகாரத்தை தேசிய மருத்துவ ஆணையம் ரத்து செய்துள்ளது. மேலும், அந்தக் கல்லூரியில் பயின்று வந்த மாணவர்களை பிற மருத்துவக் கல்லூரிகளுக்கு இடமாற்றம் செய்யவும் உத்தரவிடப்பட்டது. தேசிய மருத்துவ ஆணையத்தின் இந்த நடவடிக்கைக்கு பாஜ வரவேற்பு தெரிவித்துள்ளது.

## ஆட்சியில் வெளிநாட்டு சக்திகளின் தலையீடு இல்லை; சொல்கிறார் வெனிசுலா இடைக்கால தலைவர்

கராகஸ், ஜன.8-

வெனிசுலா ஆட்சியில் வெளிநாடுகளின் ஆதிக்கம் ஏதுமில்லை என்று அந்நாட்டின் இடைக்கால தலைவர் டெல்சி ரோட்ரிக்ஸ் தெரிவித்துள்ளார்.

போதை பொருட்களை கடத்தி உள்நாட்டு பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தியதாக குற்றஞ்சாட்டி, வெனிசுலா அதிபர் மதுரோ மற்றும் அவரது மனைவியை சிறைபிடித்த அமெரிக்க படையினர், அவர்களை புரூக்ளின் சிறையில் அடைத்தனர். இதையடுத்து, வெனிசுலாவின் தற்போது இருக்கும் துணை அதிபர் டெல்சி ரோட்ரிக்ஸை இடைக்கால அதிபராக அந்நாட்டு உச்சநீதிமன்றம் நியமித்தது.

இதனிடையே, புதிய ஆட்சி அமையும் வரை, வெனிசுலா அரசு நிர்வாகத்தை அமெரிக்காவே நிர்வகிக்கும் என்று அதிபர் டிரம்ப் அறிவித்தார். மேலும், 'நாங்கள் சொல்வதை கேட்காவிட்டால் மதுரோ எதிர்கொண்டதை விட கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று ரோட்ரிக்ஸை அதிபர் டிரம்ப் பகிரங்கமாக மிரட்டியிருந்தார்.

தொடர்ந்து, அமெரிக்காவுக்கு அதிக எண்ணெய் பீப்பாய்களை ஏற்றுமதி செய்யும் நாடாக வெனிசுலா மாறிவிட்டதாக டிரம்ப் கூறியிருந்தார்.

இந்த நிலையில், வெனிசுலா ஆட்சியில் வெளிநாட்டு சக்திகளின் ஆதிக்கம் ஏதுமில்லை என்று அந்நாட்டின் இடைக்கால தலைவர் டெல்சி ரோட்ரிக்ஸ் தெரிவித்துள்ளார். மேலும், அவர் கூறியதாவது; வெனிசுலா அரசை சொந்த மண்ணை சேர்ந்தவர்களே நடத்தி வருகின்றனர். வேறு யாரும் இல்லை. நாங்கள் சரணடையவில்லை. ஒருபோதும் சரணடைய மாட்டோம். அமெரிக்க தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு 7 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படும், என்றார்.

**NAME CHANGE**

P. Koori son of Thiru Suresh Born On Year of Birth 1950 & Native District Ramanathapuram Residing at 475/1, Kamachipuram, Mudukulathur Taluk, Ramanathapuram -623704 shall Henceforth be Known at P. Muthukoori

**P.Koori**

## திருப்பரங்குன்றம் வழக்கு: உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மேல்முறையீடு செய்ய முடிவு



சென்னை, ஜன.8-

திருப்பரங்குன்றம் மலை மீது உள்ள தீபத் தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்ற உயர் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து தமிழக அரசும், இந்து சமய அறநிலையத் துறையும் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யும் என்று தமிழக அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், ‘‘திருப்பரங்குன்றம் மலையில் தீபத் தூணில் தீபம் ஏற்றலாம் என்ற மதுரை உயர் நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் அளித்த தீர்ப்பை எதிர்த்து மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்டோர் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்திருந்தனர்.

திருப்பரங்குன்றம் மலை மீது இருக்கக் கூடிய தீபத் தூணில் தீபம் ஏற்றும் வழக்கம் தமிழ்நாட்டில் கிடையாது; தமிழ்நாட்டின் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் நாம் பின்பற்ற வேண்டும்; முன்னுதாரணங்கள் இருக்க வேண்டும்; அந்த அடிப்படையில் திருப்பரங்குன்றம் தீபத் தூணிலே தீபம் ஏற்ற அனுமதிக்கக் கூடாது என மனுதாரர்கள் தெரிவித்திருந்தனர்.

ஆனால், இன்று நீதியரசர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அறநிலையத் துறை அதிகாரிகள் மற்றும் சிலர் சென்று, பொதுமக்களுக்கு மட்டும் தடை விதித்து, தீபத் தூணிலே தீபம் ஏற்ற வேண்டும் என்ற உத்தரவை சட்டத்துக்குப் புறம்பாக தந்திருக்கிறார்கள். எனவே, இதன் மீது தமிழக அரசும், இந்து சமய அறநிலையத் துறையும் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்ய இருக்கிறது.

திருப்பரங்குன்றம் தீபத் தூணில் தீபம் ஏற்றியதற்கான ஆதாரங்கள் இருந்தால் அதைக் கண்டறிந்து அதன் அடிப்படையில் தாங்கள் அனுமதி அளிப்பதாக நீதிபதிகள் சொல்ல வேண்டும். ஆனால், எந்தவிதமான ஆதாரங்களும் கிடையாது. இதற்கு முன் ராஜாஜி, காமராஜர், எம்ஜிஆர், ஜெயலலிதா, கருணாநிதி ஆகியோரின் ஆட்சிக் காலங்களில் எல்லாம் யாருமே தீபத் தூணிலே தீபம் ஏற்ற வேண்டும் என்று கோரவில்லை. ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் இந்த கோரிக்கை வந்தபோது, இது கூடாது; நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்றுதான் சொன்னார்.

ஆனால், இன்று நீதியரசர்கள் திருப்பரங்குன்றம் மலை மீது உள்ள தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். தீர்ப்பை நாம் ஒன்றும் சொல்ல முடியாது; அதை கலங்கப்படுத்த முடியாது. ஆனால், இந்த தீர்ப்பு சட்டத்துக்கு முரண்பாடான ஒரு செயல் என்ற அடிப்படையில் இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் நாங்கள் வழக்குத் தொடர எங்களுக்கு முழு உரிமையும் உண்டு.

தமிழர்களின் கலாச்சாரம், பண்பாடு பாதுகாக்கப்பட வேண்டும். யாரோ ஒருவர் அனுமதி கேட்டதால், அனுமதி கொடுக்கிறோம் என்று சொல்வது முழுக்க முழுக்கத் தவறு. இதுவரை இல்லாத ஒரு பழக்கத்தை, வழக்கத்தை நீதிமன்றத் தீர்ப்பின் மூலமாக உள்ளே நுழைப்பது என்பது உள்நோக்கம் கொண்டதாக இருக்கிறது. எனவே, இதை நாங்கள் எதிர்க்கிறோம்.

இது தமிழர்களின் உணர்வுகளுக்கு எதிரானது. இல்லாத ஒரு வழக்கத்தை நீதிமன்றம் ஏன் புகுத்த வேண்டும் என்பதுதான் தமிழ்நாட்டு மக்களின் கேள்வி. ஒருசாரார் இதில் புகுந்து விளையாடப் பார்க்கிறார்கள். எனவே, இதை அனுமதிக்கக் கூடாது என்று நாங்கள் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய எங்களுக்கு முழு உரிமையும் உண்டு’’ என தெரிவித்தார்.

## “விஜய் ஓர் அரசியல் சக்தியாக உருவாகிவிட்டார்”

### பிரவீன் சக்கரவர்த்தி பேட்டி





கோவை, ஜன.8-

“விஜய் ஓர் அரசியல் சக்தியாக உருவாகிவிட்டார்,” என்று காங்கிரஸ் நிர்வாகி பிரவீன் சக்கரவர்த்தி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் நிபுணர்கள் மற்றும் தரவு பகுப்பாய்வுக் குழுவின் தலைவராக இருந்த சசி தரூரின் இடத்தில் இப்போது பிரவீன் சக்கரவர்த்தி இருக்கிறார். இவர் ராகுல் காந்திக்கு நெருக்கமான வட்டத்தில் இருப்பவர். இவர் விஜய்யை சந்தித்தது இன்றுவரை சலசலப்பை ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில், கோவையில் இன்று செய்தியாளர்களை சந்தித்த பிரவீன் சக்கரவர்த்தி, “தவெக தலைவர் விஜய்யை நான் சந்தித்தது உண்மை என ஏற்கெனவே கூறிவிட்டேன். அவருடன் என்ன பேசினேன் என்பதை இப்போதைக்கு சொல்ல முடியாது.

எனது அடையாளம் காங்கிரஸ் கட்சி மட்டுமே அல்ல. நான் ஒரு தனிநபராக விஜய்யை சந்திப்பதில் என்ன தவறு இருக்கிறது. நான் தனிப்பட்ட முறையில் டெல்லியில் பலரை சந்திக்கிறேன். அப்படித்தான், விஜய்யை சந்தித்தேன். ஆனால், தமிழகத்தில் தான் அதை கேள்விக்கு உள்ளாக்குகிறார்கள்.

விஜய் கூட்டத்துக்கு மக்கள் உற்சாகமாக வருகிறார்கள். விஜய்யை மக்கள் நடிகராக மட்டுமே பார்க்கவில்லை. அவரை ஓர் அரசியல்வாதியாக பார்க்கிறார்கள். அதை யாராலும் மறுக்க முடியாது. விஜய் ஓர் அரசியல் சக்தியாக உருவாகிவிட்டார்.” என்றார்.

3 கோரிக்கைகள்: தொடர்ந்து அவரிடம் ஆட்சியில் பங்கு தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர், “காங்கிரஸ் கட்சி தமிழகத்தில் 60 ஆண்டுகளாக ஆட்சியில் இல்லை. காங்கிரஸ் கட்சியை பலப்படுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. அதற்காகவே, அதிக சீட், ஆட்சியில் பங்கு அதிகாரத்தில் பங்கு ஆகிய 3 முக்கிய கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன. ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்பது காங்கிரஸ் எதிர்காலத்துக்காக வைக்கப்படும் கோரிக்கை. மற்றபடி, ஊட்டி விடும் கையை யாராவது கிள்ளுவார்களா. காங்கிரஸ் கட்சியை பலப்படுத்த இது தேவையா, இல்லையா என்பதை மட்டுமே யோசிக்க வேண்டும்.

காங்கிரஸ் ஜனநாயகம் நிறைந்த கட்சி. காங்கிரஸ் தொண்டர்கள் தங்கள் கோரிக்கைகளை சுதந்திரமாக முன்வைக்கலாம். ஆனால், கூட்டணி குறித்து காங்கிரஸ் தலைமைதான் இறுதி முடிவு எடுக்கும்.” என்றார்.

ஏற்கெனவே, தமிழக கடன் நிலவரத்தை உ.பி.யுடன் ஒப்பிட்டுப் பேசி பிரவீன் சக்கரவர்த்தி சர்ச்சையைக் கிளப்பினார். அவரது இக்கருத்து குறித்து தமிழக காங்கிரஸ் முக்கியத் தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்திருந்தனர். இந்நிலையில், மீண்டும் பிரவீன் சக்கரவர்த்தி விஜய் சந்திப்பு, ஆட்சியில் பங்கு உள்ளிட்ட விவகாரங்களைக் கிளப்பியுள்ளார்.

ஏற்கெனவே மாணிக்கம் தாகூர் பதிவிட்ட ட்வீட்டால் எழுந்த சர்ச்சைகள் தீர்வதற்குள் பிரவீன் சக்கரவர்த்தி மற்றொரு சர்ச்சைக் கருத்தை தெரிவித்துள்ளார்.



## கோழி, ஆடுகளுக்கு எல்லாம் உயிர் இல்லையா? தெருநாய்கள் வழக்கில் உச்சநீதிமன்றம் கேள்வி

புதுடில்லி, ஜன.8-

'பிற விலங்குகளுக்கு உயிர் இல்லையா? கோழிகள், ஆடுகள் வாழ வேண்டாமா?' என்று தெருநாய்கள் ஆதரவாளர்களுக்கு உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

நாட்டில் வெறிநாய்க்கடி மற்றும் அதனால் ரேபிஸ் நோய் ஏற்பட்டு உயிரிழப்புகள் அதிகரித்து வரும் நிலையில் நாளிதழ்களில் வெளியான செய்திகள் அடிப்படையில் சுப்ரீம் கோர்ட் தாமாக முன்வந்து வழக்காக எடுத்துக் கொண்டது. இதில், நாய் வளர்ப்பவர்கள் மற்றும் விலங்குகள் நல ஆர்வலர்கள் ஒரு தரப்பினராகவும், தெருநாய்களை கட்டுப்படுத்தக்கோரி மனு தாக்கல் செய்தவர்கள் மற்றொரு தரப்பினராகவும் ஆஜராகி வாதமிட்டு வருகின்றனர்.

அனைத்து தெருநாய்களையும் பிடித்து அடைக்கும் நிலை ஏற்பட்டால், குப்பை கழிவுகள் மற்றும் குரங்குகளை விரட்டுவது கேள்விக்குறியாகி விடும் என்று விலங்குகள் நல ஆர்வலர்கள் தங்கள் தரப்பு வாதங்களை முன்வைத்தனர்.

அதேவேளையில், தெருநாயால் பாதிக்கப்பட்ட நொய்டாவைச் சேர்ந்த 8 வயது சிறுமியின் தந்தை தரப்பில், 'தெருநாய்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த நொய்டா அதிகாரிகள் தவறி விட்டனர். குடியிருப்பாளர்கள் நலச்சங்கத்தினர் தங்கள் பகுதிகளில் தெருநாய்கள் இல்லாத சமூகத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும்,' என்றார்.

அப்போது, விலங்குகள் நலஆர்வலர்களுக்கு ஆதரவாக வாதிட்ட மூத்த வக்கீல் கபில் சிபல், 'நாங்கள் தெருநாய்களின் பிரியர்களாகவும், பாதுகாப்பான சுற்றுச்சூழலை விரும்புபவர்களாகவும் இங்கு வந்துள்ளோம்,' என்றார்.

இதனைக் கேட்ட நீதிபதிகள், 'பிற விலங்குகளின் உயிர்களின் நிலை என்ன? கோழிகள், ஆடுகள் வாழ வேண்டாமா?. சாலைகளில் தெருநாய்கள் இல்லாததை உறுதி செய்ய வேண்டும். நாய்கள் கடிக்காமல் இருக்கலாம், ஆனால், அதனால் விபத்துகள் ஏற்படுகின்றன. சாலைகள், பள்ளிகள் மற்றும் கல்வி நிறுவனங்களின் அருகே நாய்கள் இருப்பதால் என்ன பயன்?' என்று கேள்வி எழுப்பினர்.

## வீரவநல்லூர் வியாபாரி கடத்தி கொலை குற்றாலத்தில் உடல் மீட்பு, 3 பேர் கைது



தென்காசி, ஜன.8-

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் உள்ள தனியார் விடுதி அருகில் நேற்று முன்தினம் இரவு ஆண் ஒருவர் கொலை செய்யப்பட்டு கிடந்தார். குற்றாலம் போலீஸார் விரைந்து சென்று சடலத்தை மீட்டனர்.

விசாரணையில், கொலை செய்யப்பட்டவர் வீரவநல்லூர் அருகே உள்ள புதுக்குடி கிராமத்தைச் சேர்ந்த ராம்குமார் (48) என்பது தெரியவந்தது. இவர், வீரவநல்லூரில் மாவு வியாபாரம் மற்றும் சமையல் பாத்திரங்கள் வாடகை நிலையம் நடத்தி வந்தார்.

சுந்தரபாண்டியபுரத்தைச் சேர்ந்த கார் ஓட்டுநர் அசோக் (29) என்பவரை பிடித்து போலீஸார் விசாரணை நடத்தினர். வீரவநல்லூரைச் சேர்ந்த கோழி இறைச்சி கடைக்காரர் மணிகண்டன் (30) உட்பட 3 பேர் தனது காரில் ராம்குமாரை குற்றாலத்துக்கு அழைத்துச் சென்றதாகவும், அங்கு அவர்களை இறக்கி விட்டுவிட்டு வந்துவிட்டதாகவும் கூறினார்.

இதையடுத்து, குற்றாலத்தில் மது போதையில் இருந்த மணிகண்டன், வீரவநல்லூரில் டெய்லர் கடை நடத்தி வரும் கவுதம் (22) மற்றும் 17 வயது சிறுவன் என 3 பேரை குற்றாலம் போலீஸார் பிடித்து விசாரணை நடத்தினர்.

ராம்குமார் அடிக்கடி தன்னை கேலி செய்ததால் தனது நண்பர்களுடன் சேர்ந்து அவரை குற்றாலத்துக்கு காரில் அழைத்துச் சென்று, விடுதியில் அறை எடுத்து தங்கியதாகவும், மது போதையில் இருந்த ராம்குமாரை விடுதி அருகே அழைத்துச் சென்று கொலை செய்துவிட்டு, விடுதியில் தூங்கியதாகவும் மணிகண்டன் தெரிவித்துள்ளார். இதையடுத்து போலீஸார் வழக்கு பதிவு செய்து, 3 பேரையும் கைது செய்தனர்.

சீவலப்பேரியில் கேபிள் டிவி ஆபரேட்டர் கொலை: தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அருகே முதலூரை சேர்ந்த ஜேம்ஸ் மகன் மார்ட்டின் ஸ்டான்லி (40). கேபிள் டிவி ஆபரேட்டர் தொழில் மற்றும் கார் வாங்கி விற்கும் தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டு வந்தார். இதற்காக திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் பல்வேறு இடங்களுக்கு சென்று வருவார்.


இந்நிலையில் தனது நண்பர்களுடன் நேற்று முன்தினம் இரவில் சீவலப்பேரி பகுதிக்கு வந்திருந்தார். அங்குள்ள தோணித்துறை சுடுகாடு பகுதியில் நண்பர்களுடன் மது அருந்தியபோது அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டுள்ளது.

அதில் மார்ட்டின் ஸ்டான்லி கம்பு மற்றும் கல்லால் அடித்து கொலை செய்யப்பட்டார். இதுகுறித்த தகவலின்பேரில் சீவலப்பேரி போலீஸார் சம்பவ இடத்துக்கு சென்று, மார்ட்டினின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த கொலைக்கான காரணம் குறித்தும், கொலை செய்துவிட்டு தப்பியவர்கள் குறித்தும் போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

# சுரண்டை காமராஜர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் முதற்கட்டமாக 604 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினியை மாவட்டஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் வழங்கினார்

தென்காசிமாவட்டம், சுரண்டை காமராஜர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இன்று (05.01.2026) நடைபெற்றஅரசுவிழாவில்மாவட்டஆட்சித்தலைவர்திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள், தென்காசிநாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் அவர்கள், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ். பழனி நாடார் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டுமுதற்கட்டமாக 604 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணிணியை வழங்கினார்கள்.

தென்காசிமாவட்டத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களைச் சேர்ந்த 3503 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணிணி





வழங்கப்படவுள்ளது. அதனடிப்படையில் முதற்கட்டமாக இன்றைய தினம் 604 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணிணி வழங்கப் பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே. கமல்கிஷோர்.இ.ஆ.ப. அவர்கள்தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்டவருவாய் அலுவலர் திரு.சீ.ஜெயச்சந்திரன், மாவட்டஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மரு.தண்டபாணி, மாவட்ட சமூக நல அலுவலர் செல்வி.மதிவதனா, சுரண்டை காமராஜர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர்.கணேசன், சுரண்டை நகர்மன்ற தலைவர் திரு.வள்ளிமுருகன் மற்றும்அரசுஅலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்படபலர் கலந்துகொண்டனர்.

உலகம்உங்கள்கையில்திட்டத்தின்வாயிலாகமடிக்கணினி பெற்றதிரு.அ.ஹரிதரன் மாணவன்தெரிவிக்கையில், எங்கள்குடும்பம் விவசாயகுடும்பம். என்தகப்பனார் பெயர் அன்னராஜ். அவர்கள்ஒருவிவசாயிஅதிலிருந்துவரும்வருமானத்தைவைத்துதான்எங்கள்குடும்பம்நடைபெற்று



வருகிறதுஅந்தசூழ்நிலையிலும்என்னை காமராஜர் அரசுகலைக்கல்லூரியில் இளங்கலைமைக்ரோபயாலஜிசேர்த்துதற்பொழுதுமூன்றாம்ஆண்டுபயின்றுவருகிறேன். எனக்குஇந்தமடிக்கணினிகிடைத்துள்ளதால் படிப்பதற்கு உதவிகரமாகஇருக்கும். மேலும், வேலைவாய்ப்புஉள்ளசெய்திகளைசேகரிப்பதற்குமிகவும்பயனுள்ளதாகஇருக்கும்.எங்களைப்போன்றமாணவர்களுக்குமடிக்கணினிவரப்பிரசாதம்.மடிக்கணினிவழங்கியமாண்புமிகுதமிழ்நாடுமுதலமைச்சர்அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் எனது மனம் நிறைந்து நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**தென்காசி**



■ தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் (06.01.2026) நடைபெற்ற அரசு விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர்,185 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணிணியை வழங்கினார். உடன் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் கல்லூரி முனைவர் பெ.வேணுகோபால் உள்ளார்.



■ .தென்காசி மாவட்டம் புளியங்குடி நகராட்சி நிர்வாகம் மற்றும் நகரங்களின் தூய்மைக்கான இயக்கம் சார்பில் தீவிர தூய்மை பணிகள் மற்றும் விழிப்புணர்வுகள் முகாம்கள் நடைபெற்றது.இந்த விழிப்புணர்வு முகாமில் நகராட்சி நகர்மன்ற தலைவி விஜய சௌவுந்திரபாண்டியன் துணைத்தலைவர் அந்தோணிச்சாமி நகராட்சி ஆணையாளர் நாகராஜ் சுகாதார ஆய்வாளர் முருகன், பத்திரம் சாகுல்ஹமீது, மேற்பார்வையாளர் அண்ணாத்துரை, பிரபு ஆகியோர் கலந்து கொண்ட நிலையில் மரக்கன்றுகளை நன்று வைத்தார். இதில் தூய்மை பணியாளர் மற்றும் சமூக ஆர்வலர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# சிவகிரியில் கவிஞர் கனிமொழி பிறந்த நாள் விழா

சிவகிரி, ஜன. 08-.

சிவகிரியில் திமுகவின் துணைப் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் கவிஞர்கனிமொழியின் 58வது பிறந்த தின விழா முன்னிட்டு மருத்துவ அணியின் தலைவர் டாக்டர் சுமதி சால்ட் தொண்டு நிறுவன ஆதரவற்றோர் விடுதி மாணவ, மாணவியர்களுக்கு கேக் வெட்டி இனிப்பு வழங்கினார் தேவி பட்டணத்தில் சால்ட் தொண்டு நிறுவனம் சார்பாக இயங்கும் ஆதரவற்றோர் குழந்தைகள் இல்லத்தில் வைத்து நடந்த நிகழ்ச்சிக்கு திமுக மாநில செயற்குழு உறுப்பினர் யு எஸ் டி சீனிவாசன் தலைமை வழங்கினார் தென்காசி மாவட்ட அரசு வழக்கறிஞர் வழக்கறிஞர் மருதப்பன், மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளர் டாக்டர் செண்பக விநாயகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிவகிரி பேரூர் பொறுப்பாளர் நல்ல சிவன் வரவேற்றார். தென்காசி வடக்கு மாவட்ட மருத்துவர் அணி தலைவர் டாக்டர் சுமதி ஆதரவற்ற குழந்தைகளுக்கு அறுசுவை உணவு வழங்கினார். நிகழ்ச்சியில் திமுக சார்பு அணி நிர்வாகிகள் மணி, கார்த்திக்,தங்கராஜா, முத்துலட்சுமி, விக்னேஷ், கார்த்திக், வார்டு செயலாளர்கள் இளையராஜா, மதுரை வீரன், ராமச்சந்திரன், சாமுவேல், பாலகுரு, விவசாய அணி கங்காதரன், தேவிபட்டினம் தங்க தமிழ்ச்செல்வன், சால்ட் தொண்டு நிறுவனத்தின் குழந்தைகள் இல்லத்தின் நிர்வாகிகள் அருட் சகோதரிகள் புனித ராணி மேரி, குட்டிஇளவரசி நன்றி கூறினார்கள்.

படம் சிவகிரியில் திமுக துணை பொது செயலாளர் கனிமொழியின் பிறந்தநாளினை முன்னிட்டு மாவட்ட மருத்துவர் அணி தலைவர் சுமதி சார்பில் தேவிபட்டினத்தில் உள்ள சால்ட் ஆதரவற்றோர் மாணவர்கள் இல்லத்தில் வைத்து அறுசுவை உணவுகளை மாநில செயற்குழு உறுப்பினர் யூ எஸ் டி சீனிவாசன், அரசு வழக்கறிஞர் மருதப்பன், மாநில மருத்துவர் அணி இணை செயலாளர் டாக்டர் செண்பக விநாயகம் வழங்கினார்கள்




■ திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை நகராட்சி முன்புறம் இந்திய கலாச்சார நட்புறவுக் கழகமும், இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி எம் கே சார்பாகவும், அமெரிக்கா அதிபரை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் இந்திய கலாச்சார நட்புறவு கழக திருப்பூர் மாவட்ட செயலாளர் ஜி.செல்வராஜ், இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி திருப்பூர் மாவட்ட செயலாளர் எம்.மூர்த்தி, மாவட்ட தலைவர் பால் நாராயணன், மாவட்ட துணை செயலாளர் உடுமலை அப்பாஸ், மடத்துக்குளம் ஒன்றிய செயலாளர் முருகன், குடிமங்கலம் ஒன்றிய செயலாளர் தங்கவேல் மற்றும் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் உள்பட 100 பேர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.



■ தென்காசி மாவட்டம் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் (06.01.2026) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர். மாணவிகள் வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பாக வரையப்பட்ட ஓவியங்களை பார்வையிட்டார்.



# காங்கிரஸ் எம்.பி.,யிடம் கேள்வி கேட்கும் மக்களை மிரட்டுவதா? அண்ணாமலை கண்டனம்

சென்னை, ஜன.8-

கரூர் எம்பி ஜோதிமணியிடம் கேள்வி கேட்க வந்த நபர் மீது காங்கிரஸ் கட்சியினர் தாக்குதல் நடத்திய சம்பவத்திற்கு பாஜ மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் எம்பி ஜோதிமணியிடம், தொகுதி பிரச்னை குறித்து கேள்வி எழுப்ப வந்த நபரை, காங்கிரஸ் நிர்வாகிகள் தள்ளிவிட்டு தாக்கிய வீடியோவை தனது எக்ஸ் தளப்பக்கத்தில் அண்ணாமலை பகிர்ந்தார். மேலும், அவர் கூறியதாவது;

தனது தொகுதி எம்பியிடம் கேள்வி கேட்பதற்கு ஒவ்வொரு குடிமகனுக்கு உரிமை இருக்கிறது. ஜனநாயக முறையில் கேள்வி கேட்டால், ஏன் மிரட்டல் விடுக்கிறீர்கள்? இந்தக் கேள்வி கரூர் எம்பிக்கு மட்டும் பொருத்தமானது அல்ல. கடந்த ஆறு ஆண்டுகளாக தூக்கத்தில் இருக்கும் இண்டி கூட்டணி எம்பிக்களும் தான்.

கேள்வி கேட்கும் போது, அதற்கு முறையாக பதிலளிக்காமல், மிரட்டல், உருட்டல் விடுப்பது, தங்களின் தோல்விகளை வெளிப்படையாக ஒப்புக்கொள்வதற்கு சமம், எனக் குறிப்பிட்டுள்ளார்.

# அமைச்சர் அமித் ஷா குறித்து அவதூறு; ராகுலுக்கு நீதிமன்றம் சம்மன்

சுல்தான்பூர், ஜன.8-

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா குறித்து அவதூறாக பேசியதாக காங்கிரஸ் எம்பி ராகுலுக்கு சுல்தான்பூர் நீதிமன்றம் சம்மன் அனுப்பியுள்ளது.

கடந்த 2018ம் ஆண்டு கர்நாடகா சட்டசபை தேர்தலின் போது, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா குறித்து அவதூறு பேசியதாக காங்கிரஸ் எம்பி ராகுல் மீது, பாஜ தலைவர் விஜய் மிஸ்ரா வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு எம்பி,எம்எல்ஏக்களுக்கு எதிரான வழக்குகளை விசாரிக்கும் உத்தரபிரதேசத்தின் சுல்தான்பூர் சிறப்பு நீதிமன்றம் விசாரித்து வந்தது.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, காங்கிரஸ் எம்பி ராகுல் தரப்பு வக்கீல் காஷி பிரசாத் சுக்லா, வழக்கின் சாட்சியான ராம் சந்திரா துபேவிடம் குறுக்கு விசாரணை நடத்தினார். இதைத் தொடர்ந்து, விசாரணைக்காக காங்கிரஸ் எம்பி ராகுல் ஜனவரி 19ம் தேதி நேரில் ஆஜராகுமாறு நீதிமன்றம் சம்மன் அனுப்பியுள்ளது.

ஏற்கனவே அவதூறு வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்து வந்த ராகுல், கடந்த 2024ம் ஆண்டு பிப்ரவரி 20ம் தேதி கைது செய்யப்பட்டு, பின்னர் ஜாமினில் விடுவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



# அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை ஜன.17 முதல்வர் தொடங்கி வைக்கிறார்: அமைச்சர் பி.மூர்த்தி

மதுரை, ஜன.8-

வரும் 17ம் தேதி அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார் என அமைச்சர் பி மூர்த்தி உறுதியளித்துள்ளார்.

உலகப் புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிக்கான முகூர்த்தக்கால் நடும் விழா அலங்காநல்லூரில் நடைபெற்றது. இவ்விழாவினை வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமை வகித்து தொடங்கி வைத்தார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழர்களுடைய பாரம்பரியமான உலகப்புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிக்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. நிச்சயமாக கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு மிகச் சிறப்பாக அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு நடைபெற இருக்கிறது. இந்த அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியை வரும் 17ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் வந்து தொடங்கி வைக்கிறார்.

பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டியை வரும் 16ம் தேதி துணை முதல்வர் உதயநிதி தொடங்கி வைக்கிறார். இந்நிகழ்வில் அனைத்துக் கட்சியினுடைய முக்கியப் பிரமுகர்களும் இதிலே கலந்து கொள்ள இருக்கிறார்கள். பொதுமக்கள், ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள் அனைவரும் பங்கேற்கின்றனர்.

சிறந்த மாடுபிடி வீரருக்கு டிராக்டர்: வழக்கமாக சிறந்த மாடுபிடி வீரருக்கு கார் பரிசாக வழங்கப்பட்டு வந்தது தற்போது பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் விவசாயிகள் கோரிக்கைகளின் படி டிராக்டர் கொடுக்கலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியினுடைய ஏற்பாடுகள் அனைத்தும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் தான் நடைபெறும். பார்வையாளர்களை ஒரு மணி நேரத்துக்கு ஒருமுறை மாற்றுவது வழக்கமான ஒரு நிகழ்வு தான். டிஜிட்டல் ஸ்கிரீனில் ஸ்கோர் போர்டு வைக்கப்படும்.

போட்டிகள் அனைத்தும் எந்த பிரச்சினையும் ஏற்படாமல் நடக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் கூறினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் பிரவீன் குமார், வெங்கடேசன் எம்எல்ஏ மற்றும் விழா கமிட்டியினர் பொதுமக்கள் பங்கேற்றனர்.

# ஈரான் வன்முறையில் போலீஸ்காரர் சுட்டுக்கொலை; இதுவரை பலி 36 ஆக அதிகரிப்பு

டெஹ்ரான், ஜன.8-

ஈரான் தலைநகர் டெஹ்ரானில் நடந்த போராட்டத்தில் ஏற்பட்ட வன்முறையில் போலீஸ்காரர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இதுவரை நடந்த போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 36 ஆக அதிகரித்துள்ளது.

மேற்காசிய நாடான ஈரானில் கடும் பொருளாதார நெருக்கடி நிலவி வருகிறது. அங்கு அமெரிக்க டாலருக்கு நிகரான ஈரான் கரன்சியான



ரியாலின் மதிப்பு வரலாறு காணாத வகையில் சரிந்தது. பணவீக்கத்தால் அத்தியாவசிய பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்தது. ஈரானில் அரசுக்கு எதிராக வியாபாரிகள், பொதுமக்கள், மாணவர்கள் போராட்டங்களில் குதித்துள்ளனர்.

கடந்த டிசம்பர் 28ம் தேதி தொடங்கிய போராட்டம் வன்முறையாக மாற தொடங்கியது. பல இடங்களில் போராட்டக்காரர்களுக்கும், பாதுகாப்பு படையினருக்கும் மோதல் ஏற்பட்டது. அந்த வகையில், டெஹ்ரானில் நடந்த போராட்டத்தில் வன்முறை ஏற்பட்டது. பாதுகாப்பு படையினர், போலீசார் மற்றும் போராட்டக்காரர்கள் இடையே மோதல் ஏற்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க கண்ணீர் புகைக் குண்டுகள் வீசப்பட்டன.

அப்பகுதியில் பதற்றமான சூழல் நிலவியது. அப்போது போராட்டக்காரர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் போலீஸ் காரர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். ஈரான் போராட்டம் தொடங்கியதில் இருந்து இதுவரை 36 பேர் கொல்லப்பட்டு இருக்கின்றனர். இதில் 18 வயதுக்குட்பட்டவர்கள் 5 பேர் அடங்குவர். தொடர்ந்து பணவீக்கத்தால் விலைவாசி உயர்ந்து வருவது அந்நாட்டு மக்களிடையே கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000